# தங்காலை பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் இறுதியின் போது பேரேட்டின் மூலதன மானியக் கணக்கிலிருந்து வருமானச் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பெறுமதி ரூபா 23,947,997 ஆக இருந்த போதிலும், மாற்றப்பட வேண்டிய சரியான பெறுமதி ரூபா 63,756,498 ஆனமையால் ரூபா 39,808,501 தொகை குறைவாக வருமானச் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன மானியக் கடன்பட்டோர் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 35,462,645 ஆக இருந்ததுடன் அந்த ஆரம்ப மீதிக்குரியதாக ஆண்டின்போது ரூபா 33,953,335 தொகை மாத்திரம் கிடைத்திருந்த போதிலும் ரூபா 39,842,982 ஆகக் குறிப்பிடப்பட்டமையால் கணக்கின் மீதி ரூபா 5,889,647 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் மூலதன மானிய கடன்கொடுத்தோராக கணக்குகளில் ரூபா 46,669,969 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் பேணப்படுகின்ற வேலைப்பதிவேட்டின் பிரகாரம் நிதிஏற்பாடு செய்யவேண்டிய தொகை ரூபா 48,425,783 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோர் ரூபா 1,755,814 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 491,303 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 564,282 கூட்டுப் பெறுமதியான காகிதாதிகள் மற்றும் மின்சார உபகரண இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,067,942 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 334,912 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 4,450 | 4,546 | 127 |
| (ii) | வாடகை | 5,840 | 5,265 | 1,391 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 644 | 1,834 | 33 |
| (iv) | ஏனைய வருமானம் | 29,743 | 64,308 | 28,862 |

### 2.2.2 வாடகை

i. கடை வாடகையாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 703,402 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந்த வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2010 ஏப்ரல் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் யாயவத்தையில் 29 கடைகளுக்காக அறவிடவேண்டிய புதிய திருத்தப்பட்ட கட்டணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதனால் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 25 கடைகளுக்காக ரூபா 268,800 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. 2011 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுலாகும் உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு சொத்து 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை புதிய மதிப்பீட்டாளரின் மூலம் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், றத்தனசு பிரி கடைகளிலிருந்து 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட கட்டணம் 2015 யூலை மாதம் வரை அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 சந்தை வாடகை

-----------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,853,656 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந்த வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 32,860 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏக்கர் வரி

-----------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 127,075 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை ஏக்கர் வரி வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 வாகன வாடகை

----------------------------------

சபைக்குச் சொந்தமான மோட்டார் கிறேடர் இயந்திரம் மற்றும் ஜே.சீ.பீ இயந்திரம் என்பன வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் ரூபா 165,945 தொகையொன்று அறவிடவேண்டியிருந்த போதிலும், அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் ரூபா 28,155,320 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் என அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

i. உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து சபைக்கு ரூபா 270,000 பெறுமதியான 10 கூடாரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த 10 கூடாரங்களும் பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை 2015 மார்ச் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

ii. சபையினால் 2013 நவம்பர் மாதத்தின் போது ரூபா 690,000 பெறுமதியான 03 கூடாரங்கள் (பெரபோல ஹட்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரையிலும் அந்த 03 கூடாரங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 2013 மார்ச் 19 ஆந் திகதி சபை நிதியத்திலிருந்து ரூபா 459,270 தொகை செலவில் 20x10 அடி அளவான 5 அறிவித்தல் பதாதைகள் மற்றும் 12X08 அடிஅளவான 03 அறிவித்தல் பதாதைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2015 மார்ச் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இந்த அறிவித்தல் பதாதைகள் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்படாதிருந்தமையும் சபை சூழலில் காணப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(i) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றியும் நியமனக் கடிதம் இன்றியும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2014 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 15,000 வீதம் ரூபா 75,000 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்